# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

"கர்த்தராகிய
இயேசுவையை
நீ உன் வாயினாலே
அறிக்கையிட்டு
தேவன் அவரை
மரித்தோரிலிருந்து
எழுப்பினார் என்று
உன் இருதயத்திலே
விசுவாசித்தால்
இரட்சிக்கப்படுவாய்"

ரோமர்-10:9

செய்தி மலர்
2019
ஏப்ரல்

மலர் : 15
இதழ் : 12



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மார்ச் மாதம் முழுவதும் நம்மை கண்மணி போல வழிநடத்தின தேவன் வரும் ஏப்ரல் மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவாராக!

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் லெந்து நாட்களை நல்ல முறையில் அனுசரித்து வருகிறோம். ஆவிக்குரிய வாழ்வில் நல்ல முன்னேற்றத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு ஆண்டவருடைய வருகையில் அவரை எதிர்கொண்டு அழைக்கிற தகுதியை நம் சபையில் அனைவருக்கும் ஆண்டவர் அருள் புரிவாராக.

பவுல் அப்போஸ்தலர் சொல்கிறார் "கர்த்தராகிய இயேசுவையை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று (ரோம-10:9)

ஆம் பிரியமானவர்களே, நமக்காக இயேசு கிறிஸ்து தன் இன்னுயிரை சிலுவை மரத்தில் ஈந்தருளினார். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் எப்படிப்பட்ட தியாகங்களை செய்தார் என்று கீழ்வரும் பகுதிகளில் விளக்கமாக பார்க்கலாம்.

## 1. நமக்காக பாவமானார்...............

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை நமக்காக பாவமாக்கினார். (2-கொரி-5:21) நம் எல்லோருடைய பாவங்களையும் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக இயேசு கிறிஸ்து பலியானார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் பாவம் செய்த ஒரு நபர் ஒரு காளையைக் கொண்டு வந்து சர்வாங்க தகனபலியாக தன் பாவ நிவர்த்திக்கென்று அங்கீகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின் மேல் வைத்து கர்த்தரின் சந்நிதியில் வைத்து அந்தக் காளையைக் கொல்லக்கடவன் (லேவி-1:4) என்று எழுதியிருக்கிறது. காரணம் ஆத்துமாவிற்காக பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே. (லேவி-17:11) பிரதான ஆசாரியன் கூட தனக்காக பலி செலுத்திய பிறகுதான் தேவ சந்நிதியில் பிரவேசிப்பான். இந்த பாவ நிவாரமானது தற்காலிகமானதுதான். நிரந்தரமான தீர்வு என்னவென்றால் கடவுளிடமிருந்து மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஜீவ ஆத்துமாவினுடைய பாவ நிவாரனத்துக்காக கடவுளே மனிதனாக வந்து தன் தூய இரத்தத்தை சிந்தியாக வேண்டும். அதற்காகவே இயேசு என்ற பெயரில் மனிதனாக கடவுள் அவதரித்தார். பாவத்தை போக்கும் பலியாக தன் மாம்சத்தையே ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார். (ரோம-8:3) தான் சிந்தப்போகும் இரத்தம் தூய்மையாக இருக்க வேண்டும் என்று சொல்லி இரவெல்லாம் கண்விழித்து ஜெபித்தார். வனாந்திரத்திற்கும், மலைகளுக்கும்

தனியாக சென்று ஜெபித்தார். தன்மீது வீண்பழி சுமத்தின மனிதர்களை பார்த்து கேட்டார். "என்னிடத்தில் பாவமுன்டென்று உங்களில் யார் என்னை குற்றப்படுத்தக்கூடும்" என்று (யோவா–8:46) ஆம் பாவமறியாத அவரை நமக்காக பாவமாக்கினார். எத்தனை அன்பு மிக்கவர் நமது கடவுள். அவருக்காக நம்மையே நாம் அர்ப்பணிப்போமா?

## 2. நமக்காக சாபமானார் .

நியாப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை விலக்கி மீட்கும்படியாய் நம்முடைய சாபங்களை ஆண்டவரே ஏற்றுக்கொண்டு நம்மை பரிசுத்தவான்களாய் மாற்றினார். ஏதேன் தோட்டத்திலே சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு மனுக்குலம் சாபத்தை பெற்றுக்கொண்டது. ஆதியிலே பெற்றுக்கொண்ட இந்த சாபத்தை நீக்கும்படியாக சிலுவை மரத்தில் இரத்தம் சிந்தினதினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா–3:13)

இன்றைக்கும் விசுவாசத்தோடு இயேசுவை நோக்கி பார்க்கும்பொழுது நம்முடைய பரம்பரை சாபங்களெல்லாம் நீங்கிப்போகிறது. இயேசுவின் நாமத்தினால் நாம் புது வாழ்வை பெற்றுக்கொள்ளுகிறோம். "மெய்யாகவே நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." (ஏசா–53:4,5) ஆம் பிரியமானவர்களே அவர் சாபத்தை ஏற்றுக்கொண்டதினாலே நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். அந்த உன்னதமான தேவனுக்கு நாம் எவ்வளவு நன்றி அறிதலுள்ளவர்களாய் வாழ வேண்டும். இன்றே நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை நம் தேவனுக்கு அர்ப்பணிப்போமா? அல்லேலூயா.

## 3. நமக்காக தரித்தரரானார்

பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் வானாதி வானங்களும், பூமியிலுள்ள பொக்கிஷங்களும் அவருடையது. ஆனாலும் எல்லாவற்றையும் இழந்து நமக்காக அவர் தரித்திரரானார். நாம் அடைந்திருக்க வேண்டிய தண்டனைகளை அவரே ஏற்றுக்கொண்டு நமக்காக பரிகாரி ஆனார். அவருடைய திரு இரத்தமே நம்மை பாவமற சுத்திகரிக்கிறது. பாவத்திற்குரிய தண்டனைகளை அவரே ஏற்றுக்கொண்டதினாலே நமக்கு பாவ

விமோசனம் உண்டாகிறது. நாம் சுதந்திரவாளிகளாக ஆவியில் ஐசுவரியவான்களாக ஊருக்குள் வாழ வேண்டும் என்பதற்காக நம் அருள் நாதர் இயேசு நகரத்திற்கு வெளியே பாடுபட்டார்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கும் உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2–கொரி–8:9)

"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடிய பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலி–2:6–11)

அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி அவருக்கு உயிர்த்தெழுதலை கட்டளையிட்டார். அதைத்தான் நாம் ஈஸ்டர் என்று கொண்டாடுகிறோம். ஆம் பாதாளம் ஜீவாதிபதியை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது. அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். அவர் மரணத்தை ஜெயித்தெழுந்தார். நாமும் கூட மரணத்தைப் பார்த்து மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று சவால் விடமுடியும் காரணம் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து இன்றும் பரிசுத்த ஆவியானவராக நம்முடைய சரீரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்திற்கும் மரணத்தை ஜெயித்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள பெலன் தருகிறது. இன்றைக்கும் கூட கோடிகணக்கான உலக மனிதர்கள் இயேசுவை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் தூய்மையான தியாகத்தின் வல்லமை அப்படிப்பட்டது. வேதம் கூறுகிறது "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்." (பிலி–2:9–11)

ஆகவே பிரியமானவர்களே, நமக்காக பாவமான, சாபமான, தரித்திரரான இயேசுவையே அனுதினமும் தியானிப்போம். அவர் எப்படி

மற்றவர்களுக்காக வாழ்ந்து தன்னையே தியாகம் செய்தாரோ நாமும் கூட அவரைப் போல நற்கிரியைகளை மற்றவர்களுக்காக செய்வோம். இதன் மூலம் மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் நாமும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்வோம் என்பது நிச்சயம். வேதம் கூறுகிறது "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்." (ரோம–2:7)

இயேசுவுக்காக வாழ்ந்து தியாகம் செய்வதினாலே நமக்கு பாடுகள் மட்டுமல்ல அதன் பிறகு மகிமையான உயிர்த்தெழுதல் இருக்கிறது என்பதை ஒருநாளும்

மறந்து போக கூடாது. இயேசு கிறிஸ்துவுக்காக நாம் செலவிடும் நேரங்கள், இயேசு கிறிஸ்துவுக்காக நாம் செலுத்தும் காணிக்கைகள், இயேசு கிறிஸ்துவுக்காக நாம் பயன்படுத்தும் நம்முடைய தாலந்துகள், இயேசு கிறிஸ்துவுக்காக நாம் செய்கிற தியாகங்கள், இயேசு கிறிஸ்துவுக்காக நாம் எடுக்கும் பிரயாசங்கள், இயேசு கிறிஸ்துவுக்காக நாம் படுகிற பாடுகள் இவைகளெல்லாம் நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்குகள். இவைகள் மட்டுமே நம் வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை சத்தியங்கள்.

கர்த்தர் தாமே நம் திருச்சபையின் மக்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து லெந்து நாட்களையும் கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளையும் சிறப்பாக அனுசரிக்க அருள்புரிவாராக.

ஞாயிறு ஆராதனைக்கு இப்பொழுது
அபுஹலிஃபா மற்றும் மெஹபுல்லாவிலிருந்து
போக்குவரத்து ஏற்பாடு செய்யபட்டுள்ளது
சகோதர சகோதரிகள் இந்த அறிய வாய்ப்பை
பயன்படுத்தி தேவ ஆசீர்வாதத்தை பெற்று
கொள்ளும்படி கர்த்தருக்குள் வாஞ்சிக்கிறோம்

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரன்
**சகோ. ஸ்டாலின்**

## தெரிந்து கொள்ளுங்கள்

1. மிக மிக நல்ல நாள் – இன்று
2. நமக்கு மிகவும் வேண்டியது –பணிவு
3. மிக மிக பெரிய வெகுமதி–மன்னிப்பு
4. மிக மிக பெரிய கொடிய நோய் – பேராசை
5. நழுவ விடகூடாதது–வாய்ப்பு
6. பிறருக்கு செய்யக்கூடாதது–நம்பிக்கை துரோகம்
7. பிறருக்கு செய்ய கூடியது–உதவி
8. மிகப்பெரிய தேவை உங்களுக்கு –உழைப்பு
9. ஆபத்தை விளைவிப்பது–அதிக பேச்சி
10. திரும்ப வராதது – வாழ்ந்துவிட்ட வாழ்க்கை
11. நம்ப கூடாதது – வதந்தி
12. நம்ப கூடியது –இயேசுவை மட்டுமே
13. விலக்க வேண்டியது– சோம்பேரித்தனம்
14. அனைவரிடமும் காட்ட கூடியது–அன்பு
15. அனைவரிடமும் காட்ட கூடாதது- கோபம்
16. கோபத்திலும் இருக்க வேண்டியது- பொறுமை

# கிறிஸ்தவமே தானதர்மம்தான்

கடந்த மாத தொடர்ச்சி–

## 3. துதியும் தானதர்மமும்

தொழுகைதான் கிறிஸ்தவ பணிவிடைகளிலெல்லாம் மகுடமானது எனவேதான் விண்ணகத்தில் இடைவிடாது நடப்பது துதியும் தொழுகையுமாகும்,(வெளி 4:8–11) ஆனால் கடவுளின் மக்கள் மண்ணுலகிற்கு எப்பயனுமில்லாத அளவு விண்ணுலக சிந்தையிலே பறந்து சென்று கொண்டிருக்க கூடிய அபாய நிலை குறித்து அவர்களை எபிரேயருடைய நிருப ஆக்கியோன் எச்சரித்தார். கரிசனையோடு அவர் எழுதியதை கவனியுங்கள்,ஸ்தோத்திர பலியை இயேசு மூலம் எப்போதும் கடவுளுக்கு செலுத்துவோமாக. அறியும் நன்மை செய்யவும் தான தர்மம் பண்ணவும், மறவாதிருங்கள்: இவ்வகை பலிகள் மேல் கடவுள் பிரியமாய் இருக்கிறார். (எபி: 13:15,16)

ஆலயத்தின் நான்கு சுவர்களுக்குள்ளிருந்து ஆரவாரமாய் தொழுது கொண்டிருக்கும் அநேக வேலையில் வெளியே வருந்தி மடிந்துகொண்டிருக்கும் ஏழை எளியவர்களின் கதறல்களை கவனியாதிருக்க ஏராளம் வாய்ப்புண்டு, கடவுளை பிரியபடுத்த அல்ல நம்மையே பரவசபடுத்த நவீன கால ஆராதனைகளில் மறைந்திருக்கும் ஆபத்து நிறையவுண்டு, நாம் உற்சாகமடைவதைவிட கடவுளை உவகையடைய செய்வதே ஆராதிப்பதில் நமது நோக்கமாயிருந்தால் சமுதாயத்திலுள்ள ஏழை எளியவருக்கான அவரது அன்பில் பங்கேற்பது இயல்பான விளைவாகிறது.

தொழுகை என்பது ஒரு பரவச அனுபவம்தான், துதியெனும் தைலத்தின் அபிஷேகம் நம்மை உன்னதங்களுக்கு எடுத்து செல்லும், அகிவுலக பிரசித்து பெற்ற சுவிசேஷகர் ஒருவரிடம் அவரது சபை பின்னனி எதுவென்று நான் கேட்டபோது அவர் நான் பெந்தகொஸ்தேகாரன் ஆனால் கால்கள் இரண்டும் தரையில்தான் என்று பதிலளித்தார். பரவசமூட்டும் ஆன்மீக அனுபவங்கள் நம்மை நடை முறை காரியங்களிலிருந்து துண்டித்துவிட கூடாது என்பதே இந்த முதிர்ந்த தேவ மனிதன் என்னிதயத்தில் பதிக்க விரும்புவதாகும் அவர் கொடுத்த நகைசுவையான பதிலை நினைத்து சிரித்து கொண்டே வீடு திரும்பிய போது திடீரென ஏசாயா 66:1 என் நினைவுக்கு வந்தது கடவுள் விண்ணுலகச் சிங்காசனத்தில் அமர்ந்திருந்தாலும் அவரது பாதங்கள் மண்ணுலகில்தான் இருக்கின்றனவாம். ஹா ஹா ஹா!

புதிய இசை கருவி ஒன்று வாங்குவதற்கோ ஒளி பெருக்கி அமைப்பை நவீனமாக்கவோ பணம் செலவழிப்பது சரிதான் ஆனால் ஏழைகளை ஆசீர்வதித்து

அவர்களது உள்ளத்தை களிப்பால் பாட செய்வதற்காய் நமது சபை பட்ஜட்டில் தாராளமாய் பணம் ஒதுக்க மறக்ககூடாது, (யோபு 29:13).

சொல்ல போனால் நாம் ஏழைகளை ஆதரிக்கும் போது கர்த்தரையே ஆராதிக்கிறோம். எருசலேமிலுள்ள ஏழை விசுவாசிகளுக்காய் பணம் சேகரிப்பதை குறித்து கொரிந்து சபையினருக்கு எழுதும்போது அப்போஸ்தலன் பவுல் இத்சத்தியத்தை வெளிபடுத்துகிறார். இந்த தர்ம சகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குவதுமல்லாமல் அநேகர் தேவனை ஸ்தோத்தரிப்பதினால் சம்பூரண பயனுள்ளதாயும் இருக்கும்  தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய் தர்மஞ் செய்கிறதினால் அவர்கள் தேவனை மகிமைபடுத்துகிறார்கள் ( 2 கொரி 9:11-13) தேவன் அருளிய சொல்லி முடியா ஈவுக்காக அவருக்கே ஸ்தோத்திரம் எனும் உச்ச தொனியில் அப்போஸ்தலன் இவ்வத்தியாயத்தை முடிகிறார். வசனம் 15 வேறு வார்த்தைகளில் சொன்னால் நாம் நம்மால் முடிந்த உச்ச அளவில் எளியவருக்கும் கொடுக்கும் போதும் நாம் தேவனிடமிருந்து பெற்று கொண்டவைகளோடு அதை ஒப்பிட்டால் அது துச்சமே!

வேதத்தில் இல்லாத ஒன்றை எதோ கற்பனை செய்து நான் ஒரு புதிய உபதேசத்கைக் கண்டு பிடிக்கவில்லையென்பதைத் தயவு செய்து மனதிற்கொள்ளுங்கள் மாறாக பரிசுத்த வேதத்தில் மறைந்து கிடக்கும் அதே வேளையில் வசதியாக மறக்கபட்டதொரு சத்தியத்தையே தோண்டி எடுக்கிறேன் , அப்பப்பா அப்போஸ்தலர் 2:4ல் மட்டுமே எத்தனை பிரசங்கங்கள் (" அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வாக்கின்படியே வெவ்வேறு மொழிகளிலே பேச தொடங்கினார்கள்.) அப்போஸ்தலர் 2:44ஐப் பற்றி என்ன? விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். ஆயிரம் கிறிஸ்தவர்கள் ஓர் அரங்கத்தில் கூடி வந்த அன்னிய பாஷையில் ஆர்பரிக்கட்டும். சுற்றியுள்ள உலகம் இது ஒரு வேடிக்கை என்று கவனியாது விட்டுவிடும். ஆனால் அவர்களில் நூறு பேர் எளியதொரு வாழ்க்கை முறையை மேற்கொண்டு தங்கள் உடமைகளை இல்லாதரோடு பகிர்ந்து கொள்ளட்டும்-இவ்வித அசாதாரண அன்பின் ஆழமான பாதிப்பை சமுதாயம் கண்டும் காணாமலும் இருக்க முடியாது தர்ம செயல்களுக்கு எந்த மொழியாக்கமும் தேவை இல்லை அன்பின் ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அப்போஸ்தலர் 2:4 ஐ விட அப்போஸ்தலர் 2:44 மறுக்க முடியா அடையாளமாகும்.

## 4.காணிக்கையும் சமாதானமும்:-

தசமபாகம் என்பது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவருக்கு ஒரு கட்டாய பிரமாணமில்லை எனினும் அது ஓழுங்கும் பக்தியுமானதொரு ஆன்மீக் பழக்கமாகும். ஞாயிற்று கிழமையை ஓய்வு நாளென்றால் கர்த்தருடைய நாளென்று அழைப்பது போல் கர்த்தருக்கென்று எடுத்து வைக்கும் பணத்தை தசமபாகம்

என்றல்ல கர்த்தரின் பணம் என்றே அழைக்க விரும்புகிறேன். இப்பொழுது கேள்வி என்னவென்றால் குடும்பத்திலோ சபையிலோ கர்த்தருக்கென்று நாம் எடுத்து வைக்கும் தொகையில் எவ்வளவு ஏழைகளுக்கு செல்ல வேண்டும் என்பதே. எளியவருக்காய் செலவழிக்கும் எதுவும் எவ்விதத்திலும் ஆன்மீக காரியங்களுக்காய் செலவழிப்பதைவிட குறைந்த மதிப்புள்ளதளல்ல, ஏழைகளுக்கு இரங்குவதே கர்த்தருக்கு கொடுக்கும் கடன்தானே (நீதி 19:17)

இங்குதான் இயேசுவின் காலத்தில் பரிசேயரும் வேதபாரகரும் தவறினர், மார்க்க சம்மந்தமான காரியங்களுக்கு தசமபாகம் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்து அவர்கள் எளியோரையோ, மறந்துவிட்டனர், இவர்கள் மீது ஐயோ எனக் கூறும் ஆண்டவர் ஏழைகளுக்கு நியாயமும் இரக்கமும் செய்து நம்பகமாய் நடந்து கொள்வது சட்டமாய்த் தசமபாகம் கொடுப்பதைவிட விசேஷித்தது எனக் குறிப்பிட்டு அவர்களை அதிரச்செய்தார்(மத் 23:23) அப்போதனையை செரிப்பது நமக்கு கடினமாய் இருக்கிறதோ? அப்படியானால் நாம்தான் இன்றையப் பரிசேயர்.

சபைக்கு தசமபாகம் கொடுப்பதை உபதேசித்து மல்கியா 3:10ஐ மேற்கோள் காட்டும் நாம் நிலமற்ற லேவியரையும்,உதவியற்ற அந்நியரையும், அனாதைகளையும், விதவைகளையும், பராமரிக்க தங்கள் விளைச்சலின் (வியாபாரம் அல்லது வேலை) தசமபாகத்தை கொடுக்கும்படிக்கு கடவுள் கட்டளையிட்டிருக்கிற உபாகமம்(14:28-28)ஐயும். மறந்துவிட கூடாது, தமது சுற்று பயண ஊழியத்திற்காக இயேசுவுக்கு பணத்தேவைகள் இருந்திருந்தாலும் அவரும் அவரது சீடரும் ஏழைகளுக்கு எடுத்து கொடுப்பதற்காக ஒரு தனிப் பணப்பை வைத்திருந்தனர்(யோ 12:5,6 13:29) ஏழைகளுக்கு எவ்வளவுதான் இன்னும் கொடுக்க வேண்டும் என்று இன்னும் ஒரு கேள்வி எழலாம். திருமுழுக்கனன் யோவானையும் சகேயுவையும் உயிரோடெழுப்பி கேட்டால் பாதி என்று சொல்லி விடுவார்கள். (லூக்கா 3:11,19:8) அப்போஸ்தலன் பவுல் எளிவருக்குப் பெருக உற்சாகமாய் உதாரத்துவமாய் தாராளமாய் கொடுக்க வேண்டும் என்பார் ( 2 கொரி 9:6,7,13, 1 தீமத்தேயு 6:18)ஏறத்தாழ எல்லா சபைகளுமே காணிக்கை உறைகள் மீது உற்ச்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்" என்ற வசனத்தை அச்சடிக்கின்றன ஆனால் இவ்வசனம் சொல்லபட்ட சந்தர்பம் எளிவருக்காய் பணம் திரட்டுவதையடுத்தது என நாமறிவோமோ?(2 கொரி 9)

எளியவருக்கு நமது இரக்கமின்னைமயை கடவுள் எவ்வளவு கோபத்துடன் பார்க்கிரென்பது அனனியா சப்பீராள் தம்பதியரின் சடுதி மரணத்திலிருந்து தெளிவாகிறது(அப் 5:5,10)அப்போஸ்தலர் பாதத்தில் அவர்கள் வைக்கப்போகும் பணம் யாவும் ஏழை எளியவருக்கு சென்று விடுமென்று அவர்கள் நன்கறிந்திருந்தனர் (அப் 4:34,35)ஏழைகள் உயர்த்தப்பட்டு சபையில்

எல்லோருக்கும் ஒரே அந்தஸ்து கிடைத்த தங்களுக்கு இனி மேல் ஆலயத்தில் சிறப்பபாக தனி நாற்காலிகள் கிடைக்காது என்ற சூழ்நிலையெல்லாம் அவர்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லைபோலும்(யாக் 2:2–4) ஏழைகளுக்கு சாதகமான யோவான் ஸ்நானனின் செய்தி கனியற்ற மரங்கள் வெட்டப்பட்டு எரிக்கபடும் என எச்சரித்திருந்தது (லூக் 3:9–11) அவ்விதமே மண்ணுக்கு பாரமாயிருந்த கனியற்ற மரங்களாகிய அனனியாளும் சப்பிராளும் வெட்டி வீழ்த்தபட்டனர்.!

## 5. உபவாசமும் தான தர்மமும்

பழைய ஏற்பாட்டில் உபவாசத்தை குறித்து விரியாவ பகுதி ஒன்று ஏசாயா 54இல் உண்டு சர்வவல்லவராகிய ஆண்டவரிடமிருந்து துரவி ஆராயும் இரு கேள்விகள் இப்பகுதியிலுண்டு, இதையாய் உபவாசம் என்று சொல்லுவாய்? இது அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்? (வச 5,6) அதாவது இப்பகுதியில் தேவன் தவறான முறையில் உபவாசிப்பதற்காய் தமது மக்களை கடிந்து கொண்டு தமக்குப் பிரியமாய் உபவாசிக்கக் கற்றுக்கொடுக்கிறார்.

தங்கள் ஜெப தியான வாழ்வில் மக்கள் அதிக உன்னிபாயிருந்தனர். தினமும் ஜெபித்தனர். திருவசனத்தை மகிழ்வுடன் தியானித்தனர். கடவுளின் திரு சட்டங்களின்படி நடக்க முழு முயற்சியெடுத்தனர் (ஏசா 58:2) தங்கள் உபவாச நாட்களில் இரட்டுடித்தி சாம்பலில் உட்க்கார்ந்தனர். அவர்கள் சாப்பிடவும் குடிக்கவுமில்லையென்பது தெளிவு. அதனால் முகம் வாடி காணப்பட்டனர் (வசனம் 5)தங்கள் ஆத்துமாவை ஒடுக்கும் பயிற்சியாகவே உபவாசத்தை அவர்கள் புரிந்தனர். (வசனம் 3,5) அவர்கள செய்தவைகளில் தவறேதுமில்லை.ஆனால் யாவும் தன்னலத்திற்காகவே செய்யப்பட்டன. கடவுளின் ஆமோதிப்பை விட மக்களின் பாராட்டே அவர்களது நாட்டம் (வச 3,4) இன்னும் மோசமான காரியம் என்னவென்றால், தங்களது உபவாச நாட்களில் கூட அவர்கள் தங்கள் கூலிக்காரர்களை வாட்டி வதைத்தனர்(வச 3,4)

தவறாய் உபவாசத்தை குறித்து தமது மக்களை கடிந்து கொண்ட ஆண்டவர் உபவாசம் எனும் பயிற்சி உள்ளடங்க வேண்டிய காரியங்களை வரிசையடத்தினார். 1 கொடுமையின் கட்டுகளை அவிழ்ப்பது,2. நுகத்தின் பினையல்களை அவிழ்ப்பது, 3. ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவது, 4, எவ்வகை நுகத்தையும் உடைப்பது.5, பசித்தோருக்கு உணவை பகிர்ந்து கொடுப்பது, 6.தங்க இடமில்லா வறியோரை இல்லத்திற்கு அழைத்து வருவது. 7. உடையற்றோருக்கு உடை கொடுப்பது.(ஏசாயா 58:6,7)இவ்வேழு இரக்க செயல்களையும் உன்(னை போன்ற) மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருப்பது” என்ற ஒரே வாக்கியத்தில் அடக்கலாம். (இன்னும் .. அடுத்து வரும் மலர்களில் தொடரும்)

(நன்றி Blessing Magazine)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜோஸ்லின் மோனி பிரேம்குமார்
செல்வி. ஆன்ட்ரியா மக்தலேனா தாஸ்
செல்வி. லிடியா வில்கின்ஸ்
செல்வி. ஜோயன் ஜாஃப்ரீனா கனிஷ்
செல்வி. ஜோயன் ஹஃப்ரீனா கனிஷ்
செல்வி. கிறிஸ்டினா வினீஷ்
செல்வி. வின்சி டேவிட்
செல்வி. குமாரி ராஜன்
செல்வி. சாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
செல்வி. இபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
செல்வி. ஹான்ஸிகா சாம் ஆனந்த்
செல்வி. ஹெனா ஜோன் வினீஷ்

செல்வன். ஜெரால்டு ஜெஸ்டின்
செல்வன். ஆண்டர்சன் அறிவுச்சுடர்
செல்வன். மதன்ராஜ் மகேஷ்
செல்வன். அன்புராஜ் சங்கர்
செல்வன். ஷானுராஜ் சங்கர்
செல்வன். மோசே சத்தியநாதன்
செல்வன். விமல் டேவிட்

சகோதரி. பரமேஸ்வரி ஜெயசீலன்
சகோதரி. ஷீஜா கிறிஸ்டோபர்
சகோதரி. ஜமுனா சுப்பி ரமணி
சகோதரி. சோபியா ஜோசப்
சகோதரி. கலாராணி ஜெயக்குமார்.
சகோதரி. நிஷாந்தி விஜயன்
சகோதரி. பத்மினி வர்க்கீஸ்
சகோதரி. விஜயகுமாரி சுந்தர்ராஜ்
சகோதரி. ஜெயக்கொடி பாண்டியன்
சகோதரி. லாவண்யா வினோத்
சகோதரி. சத்தியா கண்ணன் ஜெபராஜ்

சகோ. பால சுப்ரமணியன்பு
சகோ. பாண்டியண்
சகோ. ரிச்சர்ட்சன் டேனியல்
சகோ. பிராங்களின்
சகோ. சத்தீஷ் ராஜேந்திரன்
சகோ. ஜோசப் பீட்டர் ஜான் போஸ்கோ
சகோ. ஜோசப் பாபுராஜ்
சகோ. சுகுமார்
சகோ. அல்ஃபோன்ஸ் விஸ்வநாதன்
சகோ.பென்சாம்
சகோ. குமாரசாமி
சகோ. ஜீவல்சிங்
சகோ. பால் ஜெகநாதன்
சகோ. ரவி ஜாண் பீட்டர்
சகோ. கனிஷ் ஜோஸ்வா
சகோ. கண்ணன் ஜெபராஜ்
சகோ. எட்வர்ட் சந்தோஷ்
சகோ. சந்தோஷ் ராம மூர்த்தி
சகோ. ரமேஷ்
சகோ. மகேஷ்ராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி / திரு.அல்ஃபோன்ஸ் விஸ்வநாதன்
திருமதி / திரு.சுதாகர்
திருமதி / திரு.ஜெவல் சிங்
திருமதி / திரு. ஸ்டீபன்
திருமதி / திரு. அருண் இம்மானுவேல்
திருமதி / திரு.பால் டேனியல்

**சபையின் செயற்குழு சார்பாக இனிய பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள்**

# 2019 ஏப்ரல் மாத நிகழ்ச்சி நிரல்

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/04/2019 | Pastor. ஜான் தாமஸ்(MPA Church Chennai) | |
| 12/04/2019 | Pastor. ஜான் தாமஸ்(MPA Church Chennai) | |
| 19/04/2019 | பெரிய வெள்ளி ஆராதனை | |
| 26/04/2019 | சகோ. ஐசக்துரை | சகோ. கிறிஸ்டோபர் |

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/04/2019 | Pastor. ஜான் தாமஸ்(MPA Church Chennai) | |
| 14/04/2019 | Pastor. ஜான் தாமஸ்(MPA Church Chennai) | |
| 21/04/2019 | உயிர்த்தெழுந்த ஞாயிறு (ஈஸ்டர் ஆராதனை நேரம் 3.45– 5.15) | |
| 28/04/2019 | சகோ. சுகுமார் | சகோ. ஆரோக்கிய தாஸ் |

**முழு இரவு ஜெபம்**
11/04/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
(13/04/2018–அன்று சகோதரி சிநேகலதா கிறிஸ்டோபர் அவர்கள்
(அபுஹலிஃபா)இல்லத்தில் ( சனிக்கிழமை) மாலை 6:30க்கு

**பெரிய வியாழன் ஆராதனை**
(18/04/2018,அன்று மாலை 5:15 முதல் 7:15 வரை
இடம் –பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி)

**26/04/2019 வாலிப ஐக்கிய கூடுகை**
நேரம் 6:30 வழ 8:30(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி யாத்திராகமம் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )
(Sponsor சகோதரி கிறிஸ்டி முத்தையா அவர்கள் குடும்பம்)

## மிஷனெரிச்செய்தி

## ஹெலன் ரோஸ்வியர் (1925)

ஹெலன் ரோஸ்வியர் 1925–ம் ஆண்டு ஹெர்ட்போர்ட்வியரில் ஹெஸ்லிபரி என்ற இடத்தில் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்தபோது, மெய்யான விசுவாசம் கொண்ட சில மாணவிகளின் அற்புதமான சாட்சியின் வாழ்க்கை இவரைச் சிந்திக்கும்படி செய்தது. இருபது வயதான இவர் தனது போலியான வாழ்க்கையை எண்ணிப் பார்த்து மனம் கலங்கினார். தானும் மெய்யான சமாதானத்தைப் பெற வேண்டுமென்ற வாஞ்சையால், கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது, வேறெதிலும் அதிகக் கவனம் செலுத்தாது ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கத் துவங்கினார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற வசனம் அவரது இருதயத்தைத் தொட்டது. இவர் மனந்திரும்பி தனது மாய்மாலமான வாழ்க்கையை அறிக்கையிட்டு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஹெலன் காலப்போக்கில் தான் ஒரு மிஷனெரி ஆக வேண்டுமென்ற வாஞ்சையைப் பெற்றார். கிறிஸ்துவை நான் நேசிக்கத் துவங்கியபோதே அருட்பணி செய்ய வேண்டும் என்பதைத் தவிர மற்றவை அனைத்தும் இரண்டாம் பட்சமாக ஆகிவிட்டன என்று ஹெலன் குறிப்பிட்டுள்ளார்.

ஹெலன் தனது மிஷனெரி பாரத்தை தன் தகப்பனாரிடம் தெரிவித்தபோது அவர் அதிர்ச்சியடைந்தார். தன்னுடைய மகள் ஒரு மருத்துவராக வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. தந்தையின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க ஹெலன் விரும்பவில்லை. எனவே அவர் மருத்துவ அருட்பணியாளராக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ஜெபத்தில் காத்திருந்த அவர் அதுவே தன்னைக் குறித்த தேவனுடைய சித்தம் என்பதைத் திட்டமாக உணர்ந்தார். நியூஹாம் கல்லூரியில் படித்து, 1951–ம்ஆண்டு தனது 21–ம் வயதில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். உடனடியாக ஆப்பிரிக்க அருட்பணி மையத்துக்கு விண்ணப்பம் அனுப்பினார்.

ஆப்பிரிக்க அருட்பணி மையம் இவரை காங்கோ நாட்டில் இபாம்பி என்ற இடத்துக்குச் செல்லும்படி சொன்னது. முன்பின் தெரியாத இடமாயிற்றே அவர்களது மொழி தெரியாதே என்றெல்லாம் எண்ணித் தயங்காமல், தன்னை முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் ஒப்புக் கொடுத்து விசுவாசத்தோடு புறப்பட்டார். தனது 28–வது வயதில் ஆப்பிரிக்கா சென்ற டாக்டர் ஹெலன் இபாம்பியில் ஒரு சிறிய மருத்துவமனையைத் துவக்கினார். அவருக்கு உதவியாக ஒருவருமேயில்லை. மொழிப் பிரச்சனையும் அவருக்குப் பெரிய இடையூறாக இருந்தது. போதுமான மருந்துகளும் கிடைக்கவில்லை. இவ்வளவு பிரச்சனைகளும் அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துவிட்டன.

ஹெலன் இன்னும் அதிகமாகத் தேவனைச் சார்ந்து செயல்படத் துவங்கினார். தன்னிடம் சிகிச்சைக்காக வந்தவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றியும் அவர் அருளும் ஆவிக்குரிய குணமாகுதலைப் பற்றியும் ஜெபத்தோடு எடுத்துக்கூறினார். அதுவரை நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத பலர் கிறிஸ்துவை அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். 16 வயதான ஜாண் மங்காடிமா மூலம் தாய்மொழியாகிய ஸ்வாஹிலி மொழியை கற்றுக்கொண்டார். உள்ளூர் மொழியை நன்றாகப் பேசக்கற்றுக்கொண்ட ஹெலன் பயிற்சி பெற்ற உள்ளூர்வாசிகளின் துணையோடு 2 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும் கட்டி முடித்தார். வசதியற்ற காட்டின் நடுவே 5 துணை செவிலியர்களுடன் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஒரு பெரிய சாதனையே. ஹெலன் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார்.

சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் புத்துணர்வைப் பெற்றிருந்த டாக்டர் ஹெலன் 1960–ம் ஆண்டில் ஆப்பிரிக்கா திரும்ப எண்ணியபோது காங்கோ நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டிருந்தது. நீண்ட காலமாக பெல்ஜியம் நாட்டுக்கு அடிமைப்பட்டுக்கிடந்த காங்கோ மக்கள் தங்கள் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருந்த வேளை அது.

காங்கோ நாட்டில் ஏற்பட்ட கலகங்களுக்கும் வன்முறைகளுக்கும் தப்பி பிழைக்கும்படி வெள்ளைக்காரர்கள் நாட்டை விட்டு வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட வேளையிலும் துணிவோடு அந்த நாட்டுக்குச் சென்றார். 3 வாரத்துக்குள் உள் நாட்டுபோர் காங்கோவில் துவங்கியது. மிஷனெரி பணித்தளங்கள் மூடப்பட்டன. மிஷனெரிகளைத் திரும்பி வரும்படி அருட்பணி மையங்கள் கட்டளையிட்டன. ஆனால் ஹெலன் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார். அடுத்த நான்கு ஆண்டுகள் புரட்சி படை வீரர்களின் பல சித்திரவதைகளை விசுவாசத்தோடு சகித்துக்கொண்டார். இவர் தாக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார். இறுதியாக சிம்பா படைவீரர்களால் கைது செய்யப்பட்டார். ஐந்து மாதங்கள் ஹெலன் சிறை வைக்கப்பட்டார். சிறையிலும் கிறிஸ்துவைப் பற்றி கூறி, தன்னுடைய சமாதானத்தை அவர்களோடு பகிர்ந்து கொண்டார். தன்னைப் பிடித்துச் சித்திரவதை செய்தவர்களின் மொழியை ஹெலன் அறிந்திருந்தபடியால், அவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றித் துணிவோடு எடுத்துக் கூறினார்.

1964–ம் ஆண்டு இறுதியில் சர்வ தேசப்படையினர் ஹெலனை சிறையிலிருந்து விடுவித்தனர். புத்தாண்டு தினத்தன்று ஹெலன் விமானம் மூலம் இங்கிலாந்து திரும்பி வந்தார். ஹெலன் உருவாக்கின மருத்துவமனை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்றும் கவனிப்பாரில்லாமல் நோயாளிகள் தவிக்கிறார்கள் என்றும் உருக்கமான கடிதமொன்றை ஜாண் மங்காடிமா எழுதி அனுப்பியிருந்தார். கடிதத்தைப் படித்த ஹெலன் அங்கே திரும்பிச் சென்று நிலைமையைச் சீர் செய்ய வேண்டும் என்ற பாரத்தைப் பெற்றார். தன்னை விசுவாசத்தில் பலப்படுத்தும்படி ஹெலன் தேவனுடைய உதவியை நாடினார்.

# 2019 ஏப்ரல் மாதத்திற்கான வேத வினா!

1. நீ என்னை பார்க்கிலும் நீதிமான் என்றது யார்?

2. நன்மைக்கு பதிலாக அவன் எனக்கு தீமை செய்தான் என்றது யார்?

3. சவுல் ராஜாவின் தலையை வெட்டினவர்கள் யார்?

4. தாவீது யாருடைய தலையை வெட்டினார்?

5. தன் புருஷனை பயித்தியகாரன் என்ற ஸ்திரி யார்?

6. போசேஸ் சேனே இவைகள் என்ன?

7. எந்த பிள்ளையாண்டனது தாய் அவனுக்கு சின்ன சட்டையை தைத்தாள்?

8. நான் பாவம் செய்தேன் என்ற அரசன் யார்?

9. நானும் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்கிறவனாய் இருப்பேன் என்றது யார்?

10. நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதம் செய்தேன் என்றவர் யார்?

11. சிங்கத்தையும் கரடியையும் கொன்றவன் யார்?

12. என்பத்தைந்து கர்த்தருடைய ஆசாரியர்களை கொன்றவன் யார்?

13. ஐயாயிரம் சேக்கல் நிறைவுள்ள வெண்கல போர் கவசம் தரித்து கொண்டிருந்தவன் யார்?

14. ஒட்டகங்கள் மேல் ஏறி ஓடிப்போன வாலிபர் எத்தனை பேர்?

15. தண்ணீரை கொண்டு கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றினவர்கள் யார்?

விடைகளை வருகின்ற 20-04-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் Seithi Malar ATC குரூப்பில் அனுப்பவும் # 66015503) விடைகளை வேதா கமத்தில் 1 சாமுவேல் 2,7,12,15,17,22,24,25,30,31. ஆகிய அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் ).

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -

**மத்தேயு 7:7**

# 2019 மார்ச் மாத வேத வினாவுக்கு பதில்

1. சாலொமோன் 2 நாளாகமம் – 7– 1
2. கர்த்தருடைய கண்கள் 2 நாளாகமம் – 16 – 9
3. எசேக்கியா ராஜா 2 நாளாகமம் – 32 – 9
4. ஆசா 2 நாளாகமம் – 16 – 14
5. பெக்கா 2 நாளாகமம் – 28 – 6
6. மனாசே 2 நாளாகமம் – 33 – 20
7. உசியா 2 நாளாகமம் – 26 – 9
8. சாலொமோன் 2 நாளாகமம் – 6 – 13
9. ..........................................
10. அத்தாலியாள் – அகசியாவிற்கு 2 நாளா – 22 – 3
11. அமத்சியா ராஜா 2 நாளாகமம் – 25 – 6
12. சேரா 2 நாளாகமம் – 14 – 9
13. உசியா 2 நாளாகமம் – 26 – 9
14. எசேக்கியா 2 நாளாகமம் – 32 – 31
15. யோசபாத் 2 நாளாகமம் – 16 11,12

## இரு அ..ஆ..வரிசையில்

அ. ன்பானவனா(ளா)ய்
ஆ. ர்வம் மிக்கவனா(ளா)ய்
இ.னிமை பேச்சுடயவனா(ளா)ய்
ஈ. கை கொண்டவனா(ளா)ய்
உ. ண்மையானவனா(ளா)ய்
ஊ.க்கம் உள்ளவரா(ளா)ய்
எ– ளிமையானவனா(ளா)ய்
ஏ. டு பல கற்றவனா(ளா)ய்
ஒ. ளி மிக்கவனா(ளா)ய்
ஓ.ங்கி புகழ் அடைந்தவானா(ளா)ய்
ஔ.ஷதமாய் இரு..

## 2019 மார்ச் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்
Sis. ஜோனா அசோக்குமார்

வாகன வசதிக்கு
சகோ. ஜான்சன் அவர்களை
அனுகவும்

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலை பேசி .எண்

**97610275**

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. ( 2 கொரி 3:17)

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.
ரோமர் 14:17

தனது 41–வது வயதில் 1966–ம் ஆண்டு ஹெலன் மறுபடியுமாக காங்கோ நாட்டுக்குத் திரும்பினார். டாக்டர் படிப்பை முடித்திருந்த ஜாண் மங்காடிமா, மருத்துவ மனையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்ததைக் கண்டு ஹெலன் மகிழ்ச்சியடைந்தார். ஒரு நற்செய்திப் பணி மருத்துவ மையத்தை உருவாக்கினார். இந்த மையத்தில் ஒரு மருத்துவப் பயிற்சிக் கல்லூரி அருட்பணி மருத்துவர்கள் வந்து செல்ல ஒரு விமான ஓடுபாதை மற்றும் வடகிழக்கு காங்கோ காட்டுப் பகுதியில் நான்கு சிறு மருத்துவமனைகள் ஆகியவற்றை அமைத்தார். பல்வேறு அருட்பணி அமைப்புகளின் மருத்துவமுயற்சிகளை ஒருங்கிணைப்பதும், பயிற்சிக் கல்லூரிக்கு அரசு அதிகாரத்தைப் பெறுவதுமே ஹெலனின் நோக்கமாக இருந்தது. விசுவாசத்துடன் செயல்பட்டார். பத்தாண்டுக்குள்ளாக ஹெலனின் 24 ஆண்டு காலக் கனவுகள் நிறைவேறும்படி தேவன் கிருபை செய்தார். நாடெங்கும் ஒன்றோடொன்று தொடர்புகொண்ட சிறு மருத்துவ மனைகள் நிறுவப்பட்டன.

1971–ம் ஆண்டு டாக்டர் ஜாண் மங்காடிமாவை மருத்துவமனையின் இயக்குநராக ஹெலன் நியமித்தார். அதே நாள் பயிற்சிக் கல்லூரிக்கு அரசு அங்கீகாரமும் கிடைத்தது. அதற்காக தேவனைத் துதித்தார், இரண்டு ஆண்டுகள் கழித்து டாக்டர் ஹெலன் தனது 48–வது வயதில் காங்கோ நாட்டிலிருந்து விடைபெற்றார். காங்கோ நாட்டைவிட்டு வந்த போதிலும் ஹெலன் தனது அருட்பணி ஊழியத்தைக் கைவிடவில்லை. உலக அருட்பணி அமைப்பின் பிரதிநிதியாக உலகெங்கும் சென்று விசுவாசமுள்ள வாலிபர்களும், இளம்பெண்களும் அருட்பணி செய்ய முன் வரவேண்டுமென்று அறைகூவல் விடுத்து வருகிறார். சுவிசேஷத்தை மற்றவர்களும அறியச் செய்வதற்காகவே நாம் இந்தக் குறுகிய கால வாழ்க்கையைப் பெற்றுள்ளோம் என்பதே அவரது அறைகூவல்.

கர்த்தரின் பணியில்
அன்பு சகோதரன்
S.சுகுமாரன்

## விழுங்கி விடும் சில

1. ஜெபம் – துன்பத்தை விழுங்கிவிடும்
2.புறங்கூறுதல் –ஜெபத்தை விழுங்கிவிடும்
3. தர்மம் –நோய்களை விழுங்கிவிடும்
4. பொய்– மனித நேயத்தை விழுங்கிவிடும்
5. பெருமை, விபச்சாரம், செல்வங்களை விழுங்கிவிடும்
6. கவலை – மனிதனின் வயதை விழுங்கிவிடும்
7. மகிழ்ச்சி – துக்கத்தை விழுங்கிவிடும்
8. TV. – நேரத்தை விழுங்கிவிடும்.

# !மேன்மை!

கிறிஸ்வுக்குள் பிரியமானவர்களே, மேன்மை என்றதும். நம் நினைவில் வருவது உயர்வு, மற்றவர்கள் முன்பாக உயர்ந்த நிலை, கல்வி, வேலை, குடும்பம், ஐசுவரியம், சுகம், சமாதனம், ஆகியன இதுவும் முக்கியமே. கிறிஸ்துவை அறியாதவர்களும் இதே முக்கியத்துவத்தை கொண்டு உள்ளன. கிறிஸ்தவன் என்பதற்கு கிறிஸ்துவை உடையவன் என்று பொருள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் நாம் உயர்வடைய ஆவிக்குறிய மேலானதை அல்லது மேன்மையானதை நாட வாஞ்சிக்க வேண்டும்

சங்கீதகாரனாகிய தாவீது ராஜா (சங் 6:1)ல் எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாக இருக்கிறது என்கிறார் மேலும் (சங் 20:7)ல் சிலர் இரதங்களை குறித்தும், சிலர் குதிரைகளை குறித்தும் மேன்மை பாராட்டுவார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய மேன்மை பாராட்டுவோம்" என்கிறார். அதே போல் வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் பின்வாங்கிய நாட்களில் இஸ்ரவேல்ஜனங்கள் யோசுவா மோசேயோடு கூட நடந்தான். யோசுவா கண்டு கொண்ட மிகப்பெரிய உண்மை தேவன் மோசேயோடே கூட இருக்கிறார் என்பது. எனவேதான் அந்த மேன்மையான நாமத்தை அவனும் வாஞ்சித்து தேவ சமூகத்தை தேடி நடக்கிறான். பிற்காலத்தில் தேவ மேன்மையயை கண்டு ருசித்ததினால் "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம். என்கிறான் கர்த்தரையே என்பது கர்த்தர் மாத்திரம்தான். உலகத்தின் மேன்மைகளான பணம், புகழ், அந்தஸ்து அல்ல.. பணம், புகழ் அந்தஸ்து போன்றவைகளை நாம் சேவிக்க கூடாது இவை கர்த்தர் நமக்கு தந்த ஈவு புதிய ஏற்பாட்டில் பவுல் சொல்லும் போது தேவன் நம் மேல் வைத்த அன்பினாலே தம்முடைய குமாரை பாதாளம் வரை அனுப்பினார். இயேசு பாதாளம் வரை சென்றதினால்தான் புற ஜாதியானாகிய நாமும் பரலோகம் செல்ல போகின்றோம்.மேலும் பிலிப்பு 3:10ல் பார்க்கும்போது எபபடியாகிலும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கும் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன் என்கிறான் பவுலை போல நாமும் பரலோக மேன்மையை அடையும்படிக்கு இவ்வுலகத்தின் மேன்மைகளை குப்பையாக எண்ணுவோம் மேலும் நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் சிலுவையை குறித்தே அல்லாமல் வேறொன்றையும்.குறித்து மேன்மை பாராட்டமாட்டேன் என்கிறான்.

நம்முடைய மேன்மை கல்வாரியாக இருக்கும் போது தேவன் மகிமைபடுவார். கல்வாரியில் தேவன் நமக்கு தந்த ஈவு எபி 11:6ல் வாசிப்பது போல "அதையல்ல அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்" என்று . எனவே நாமும் கல்வாரி சிலுவையின் மூலம் நமக்கு அளிக்கப்பட்ட இரட்சிப்பையும், அதன் மூலம் நாம் பெற்றுக் கொண்ட பரலோக மேன்மையையும் பெற வாஞ்சிப்போம் அப்பொழுது தேவ குமாரனில் பிதா மகிமைபடுவார். எனவே நம்முடைய மேன்மை கல்வாரியே

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி: பாப்பி குமார்

# பெரிய வியாழன்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் அன்பு நிறைந்த நாமத்திற்கே மகிமையுண்டாவதாக!. பெரிய வியாழனை குறித்தும் அதன் முக்கியத்துவத்தை குறித்தும் திருவிருந்தின் முக்கியத்துவத்தை குறித்தும், சற்றும் தியானிப்போம்.

இதை வியாகுல வியாழன் என்பார்கள்,பெரிய வியாழன் என்பார்கள்,கட்டளை வியாழன் என்று சபையிலே பேசுவார்கள், விசுவாசிகளும் சொல்லுவார்கள், ஏன் என்று சில காரியங்களை பார்ப்போம்.

1.. இந்த வியாழன் இரவில்தான் தன்னுடைய சீடர்களுக்கு திருவிருந்து கொடுத்தார்.

2. திருவிருந்து ஏற்படுத்தியவர் மனிதன் அல்ல, தேவனே

3 . திரு–(மரியாதைக்குரிய), விருந்து– (ஆகாரம் )

4. இந்த விருந்து எல்லோருக்கும் கிடையாது,மனம் திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு, ஞானஸ்தானம் பெற்றவர்களுக்கு மாத்திரம் கிடைக்கும்.

5. இந்த விருந்தை சாப்பிடுவதற்கு முன் தன்னைதான் சோதித்தறிந்து கலந்து கொள்ள வேண்டும்.

6. அபாத்திரமாய் கலந்து கொண்டவர்கள்,மரித்தும் இருக்கிறார்கள்,(1 கொரி11:28)

7. இந்த விருந்தின்போது இயேசுகிறிஸ்து மற்றவர்களின் கால்களை கழுவினது போல, கலந்து கொள்கிறவர்களும் தாழ்த்த வேண்டும்.

8. இந்த விருந்தில் கலந்து கெள்கிறவர்கள், செய்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டு ஒப்புரவாக வேண்டும் என்று கூறி அடுத்த எங்கே நடந்தது என்று பார்ப்போம்,

தயவு செய்து லூக்கா 22:10–13 வசனங்களை வாசித்துவிட்டு தொடர்ந்து படியுங்கள்.இந்த விருந்து எங்கே நடந்தது என்றால் மேல் வீட்டில் நடந்தது. லூக்கா 22:12(2ஆம் வரியை படிக்கவும்)இது ஏன் மேல் வீட்டில் நடந்தது என்றால் திருவிருந்து எடுக்கிறவர்களுக்கு மேலான எண்ணங்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில் மேல் வீட்டில் நடக்கிறது.கிறிஸ்தவர்களுக்கு எப்போதும் தூரப்பர்வை இருக்க வேண்டும். ஞாழசவ அனைெ இருக்ககூடாது. பூமியிலுள்ளவைகளை மாத்திரமல்ல மேலானவைகளை நாடவேண்டும்.(கொலேசியர் 3:2)நாம் இந்த பூலோகத்திற்கு சொந்தமானவர்கள் எனக்கூறி இந்த விருந்து காலையிலோ மத்தியானத்திலோ நடக்க வில்லை, மாலையில் நடந்தது(மாற்கு 14:17)இந்த விருந்தில் கலந்து கொள்ளும் போது கிறிஸ்துவுடனே ஐக்கியம்கொள்கிறோம். இந்த விருந்தில் அப்பம், ஜிவ அப்பம் பிட்கப்படுகிறது. இந்த அப்பம் எப்படி பிட்கபட்டதோ, அதைவிட இயேசுவின்சரீரம் நமக்காக பிட்கபட்டது, இந்த அப்பத்தை இயேசுவின் சரீரமாக நினைத்த சாப்பிட வேண்டும். பழைய ஏற்பாட்டில் யாத் 12 ஆம் அதிகாரத்தை வாசித்துகொள்ளுங்கள். பிறகு இதை படியுங்கள். எந்தெந்த வீட்டின் வாசற்படியில் இயேசுவின் இரத்தம் தெளிக்கபடவில்லையோ அந்த வீடுகளில் மரணம் ஏற்பட்டது, இந்த நேரத்தில் ஒன்றை தெரிவித்துக்கொள்ள கட்மைபட்டுள்ளேன் பழைய ஏற்பாட்டில் இரத்தம் தெளிக்கபட்டது, ஆனால் புதிய ஏற்பாட்டில் இரத்தம் ஊற்றபட்டது, தெளிப்பதற்கு கொஞ்சம் அரத்தம் போதும் ஊற்றபடுவதற்கு நிரம்ப இரத்தம் தேவைபடும்,தன் சரீரத்திற்கு ஒரு சொட்டு இரத்தம் வைத்து கொள்ளாமல் நமக்காக கொடுத்தார். இரத்தத்தில் உயிர் இருக்கிறது.(லேவி 17:11) இதை ஜீவ அப்பம் இநத அப்பத்தை, அருந்துகிறவர்கள் என்னெற்றைக்கும் மரியாமலிருப்பார்கள், இந்த அப்பம் இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தில் சாப்பிட்ட அப்பம் அல்ல. இது ஜீவ அப்பம் என்று கூறி மனம் திரும்பி, அயத்தமாகுங்கள் என்று கூறி முடிக்கிறேன்.

நன்றி

முத்தான செய்திகள் -நூலிளிருந்து

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு


















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்
66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்
99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்
23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . பியூலா ஜெகநாதன்
60797360

வாலிப ஐக்கிய தலைவர் –
சகோ. ஆரோக்கியராஜ்
66159784

Church Website Address - ahmaditamilcongregation.org
Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களுக்கு வாகன வசதி தேவைபடும்
பட்சத்தில் நீங்கள்
சகோதரர் ஜான்ஸன் அவர்களை தொடர்பு கொள்ளும்படி
கேட்டுக் கொள்ள படுகிறோம்
அவரது தொலை பேசி எண்
97610275

Private Circulation only